**மதுகம பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**
-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 13 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதுகம பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 411,500 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த முச்சக்கர வண்டியும் கொம்போஸ்ட் பிரிவிற்காக ரூபா 100,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஹலர் இயந்திரமும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர் பிணைப் பதிவேடுகளின் படி, பிணை முதலீட்டு மீதி ரூபா 61,620 தொகையான போதிலும் அத்தினத்தில் ரூபா 77,346 தொகையான மீதி மாத்திரமே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2012 மகநெகும செயற்திட்டத்தின் கீழ் குறைவேலைகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2014 மே 20 ஆம் திகதி வரையிலும் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிராத போதிலும் 2 செயற்திட்டங்களுக்குரித்தான ரூபா 1,660,868 தொகையான கைத்தொழில் கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது பணிக் காசேட்டின் கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 54,913,010 தொகையான போதிலும் ரூபா 53,955,669 தொகையாக மூலதனச் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையும் பணிக் காசுக் கணக்கிலிருந்து பொதுக் காசுக் கணக்கிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினத் தொகையான ரூபா 2,698,461 கழிக்கப்படுவதற்குப் பதிலாக கூட்டப்பட்டிருந்தமையால்

மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவினம் ரூபா 4,439,581 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது සහිකා படிப்பணப் பெறுவனவுகளான ரூபா 711,167 சம்பளச் செலவினத்திலிருந்து கழிக்கப்பட்டுக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் அப் பெறுமதியால் சம்பளச் செலவினம் மற்றும் வருமான மானியப் பெறுவனவு குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) வீதவரிக் கணக்கில் நிலுவை மீதி சீராக்கப்படுவதற்காக தொங்கல் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 47,546 சீராக்கப்படுவதற்காக எழுதப்பட்டிருந்த நாட்குறிப்புப் பதிவுகள் அப் பெறுமதியால் தொங்கல் கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியம் செலவு வைக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது கணக்கிற்கு பதியப்படுகையில் திரண்ட நிதியம் வரவு வைக்கப்பட்டு வீதவரிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டின் சம்பள மீளளிப்பிற்காகக் கிடைக்கப்பெற்றிருந்த காசு, சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை மீளாய்வாண்டில் சீராக்கப்படுவது தேவையற்ற போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 838,936 தொகையால் தொங்கல் கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியம் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) முன்னைய ஆண்டின் இறுதியில் ஊழியர் கடன் கணக்கு மீதி ரூபா 9,252,807 தொகையான போதிலும் ஐந்தொகையில் ரூபா 9,226,272 ஆகப் பதிவு செய்யப்பட்ட தவறைச் சீராக்குவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 26,535 தொகையான ஊழியர் கடன் கணக்கு வரவு வைக்கப்பட்டு தொங்கல் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 270,433 தொகையால் தொங்கல் கணக்கு வரவு வைக்கப்பட்டு ஊழியர் கடன் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) முன்னைய ஆண்டின் நிலுவைச் சம்பள மீளளிப்புக் கணக்கு மீதி, பரீட்சை மீதியில் பதிவு செய்யப்படுகையில் ரூபா 2,048,834 குறைவாகப் பதிவு செய்யப்பட்டமையைச் சீராக்குகையில் அப் பெறுமதி நிலுவை சம்பள மீளளிப்புக் கணக்கு வரவு வைக்கப்பட்டு தொங்கல் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு சம்பள மீளளிப்பு கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) முன்னைய ஆண்டிலிருந்து கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 3,995,289 தொகையான அன்பளிப்புப் பெறுவனவுகள் மூலதனமாக்கப்படுகையில் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதனை சீராக்குவதற்காக அப் பெறுமதி திரண்ட நிதி வரவு வைக்கப்பட்டு மூலதனப் பயன்பாட்டிற்கு வருமானத்திலிருந்து பங்களிப்புக் கணக்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக அப் பெறுமதிகள் இரண்டிற்காக ரூபா 3,267,845 மாத்திரமே சீராக்கப்பட்டிருந்தது.

(ஓ) 2010 ஆம் ஆண்டின் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்ட ரூபா 77,344 தொகையான ஊழியர் பிணை மீதி முன்னைய ஆண்டின் போது கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிராத தவறு மீளாய்வாண்டின் போதும் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2014 நவம்பர் அளவில் 02 ஐயவினாக்களுக்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தகவல்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 208,975,109 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,260,916 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 8,980,607 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 6,974 | 4,893 | 8,315 |
| (ii) | வாடகை | 5,483 | 5,039 | 1,032 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 335 | 328 | 28 |

**2.2.2 வீதவரி**

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய ரூபா 7,624,493 தொகையான நிலுவை வரி மீதியில் 2014 மே 30 ஆம் திகதி வரையில் ரூபா 689,146 அறவிடப்பட்டிருந்ததுடன் இதன் படி நிலுவை மீதி ரூபா 6,935,347 ஆகக் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் தலைமை அலுவலக அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்குரித்தான வீதவரி செலுத்துடனர்களின் ரூபா 10,000 இலும் பார்க்க நிலுவை மீதி ஒன்றைக் காண்பிக்கும் 43 வரி

செலுத்துனர்கள் காணப்பட்டதுடன் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 826,378 ஆகக் காணப்பட்டது. இந் நிலுவை மீதி 1 ½ ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரையான காலமாக நிலவிவருவதுடன் அந் நிலுவை மீதி அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 ஏக்கர் வரி

நடைமுறை ஆண்டின் போது ரூபா 35,993 தொகை ஏக்கர் வரியாக பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் இதிலிருந்து ரூபா 10,943 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இவ்வாறே, ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 67,895 தொகையான நிலுவை மீதியில் ரூபா 494 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் நடைமுறை ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 92,451 ஆகக் காணப்பட்டது.

### 2:2:4 கைத்தொழில் மற்றும் வியாபார வரி

அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிக்குரித்தான வியாபார நிலையங்களிலிருந்து வியாபார மற்றும் கைத்தொழில் வரி ரூபா 22,450 தொகை 2014 மே 30 ஆம் திகதி நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.5 ஏனைய வருமானம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வியாபார நிலைய வாடகை நிலுவை ரூபா 910,945 தொகையானதுடன் இதில் தலைமை அலுவலக அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிக்குரித்தான வியாபார நிலையங்களில் இருந்து 01 மாதம் முதல் 42 மாதங்கள் வரையான கால எல்லைக்குட்பட்ட 2014 மே 30 ஆம் திகதிக்கு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 442,331 தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 8,000,000 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 7,000,000 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நூல் 5 கம்பிகள் 66 எவ்வித செயற்பாட்டிற்கும் ஈடுபடுத்தப்படாது பயன்பாடின்றி துரப்பிடிப்பிற்கு உட்படுத்தப்பட்டு சபை வளாகத்தில் காணப்பட்டது.

(ஆ) வாகனங்கள் கழுவுவதற்காக 2013 ஆகஸ்ட் 18 ஆம் திகதி ரூபா 33,416 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூடிய அமுக்கம் கொண்ட இயந்திரமொன்று செயற்படுத்தப்படுவதற்கு முடியாதமையால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாதிருந்தது.

(இ) வெல்டிங் டிரான்ஸ்போமர் இயந்திரமொன்று பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட முடியாதிருந்தது.

(ஈ) 2012 சனவரி 13 ஆம் திகதி ஒரு அலகிற்கான கிரயம் ரூபா 700 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கைத்தாங்கலற்ற 55 பிளாஸ்ட்டிக் கதிரைகளும் இடர் முகாமைத்துவ அதிகாரசபையால் 2011 ஏப்ரல் 20 ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 1000 லீற்றர் நீர் தாங்கி 01 உம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட முடியாது உடைந்த நிலையில் சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(உ) 2010 மார்ச் 04 ஆம் திகதிய ரூபா 87,765 இற்கு கைவிரற் பதிவு இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதல் இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராததுடன் 2012 ஒக்டோபர் 23 ஆம் திகதி இயந்திரப் பழுதுபார்ப்பிற்காக வழங்கல் நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2014 மார்ச் 12 ஆம் திகதி வரையிலும் திருத்தப்பட்டு மீளக் கொண்டுவரப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) அமைச்சர்களுக்கு சீருடை வழங்கப்படுவதற்காக சபை நிதியத்திலிருந்து செலவினத்தை ஏற்பதற்கு சட்டரீதியான ஏற்பாடு இல்லாத போதிலும் சபையின் 16 அமைச்சர்களுக்காக சீருடையாக நீளக் காற்சட்டைகளும் மேற்சட்டையுமாக வழங்கப்பட்டமைக்காக 2013 திசெம்பர் மாதம் ரூபா 52,500 சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் குறித்த தினத்தில் பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிராமையால் 2003 செப்தெம்பர் முதல் 2013 யூலை வரையான காலத்தின் போது ரூபா 240,814 தொகையான மிகைஅறவீட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நிலையான முகாமைத்துவ உதவிப் பணியாளர்கள் 22 பேரும், அமைய, நாளாந்த மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 14 பணியாட்களும் சபையின் தலைமைக் காரியாலயத்தில் கடமையாற்றியதுடன் கணக்குப் பிரிவின் கடமைகளுக்காக குறித்த உத்தியோகத்தர்கள் 07 பேரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கையில் இறுதிக் கணக்கின் குறைபாடுகள் சீராக்கப்படுவதற்காக வெளித் தரப்பினருக்கு 2013 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 12,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2012 ஆம் ஆண்டின் மாகாண குறித்த பணி ஒப்படைப்பின் கீழ் 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 300,675 பெறுமதியான புல் வெட்டும் இயந்திரமொன்று 2014 மார்ச் மாதமளவிலும் விளைவற்றுப் பழைய சபைக் கட்டிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.4 திட்டக் குழுக் கொடுப்பனவு செலுத்தப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2004 திசெம்பர் 15 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் LG/07/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் படி, கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதற்கு கடமை நேரத்திற்கு புறம்பாக 2 மணித்தியாலங்களுக்கு கூடுதலான காலம் திட்டக் குழு நடாத்தப்பட வேண்டியதுடன் வரவுப் பதிவேடும் அறிக்கைப் புத்தகமும் பேணப்பட வேண்டும். எனினும், சபையால் திட்டக் குழுவிற்காக வருகைப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிராததுடன் நேரம் குறிப்பிடப்படாது அறிக்கைப் புத்தகத்திலேயே கையொப்பம் இடப்பட்டிருந்தது. சபை நாளாந்தம் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேட்டைப் பரீட்சிக்கையில் திட்டக் குழு நடாத்தப்பட்ட 48 தடவைகளிலும் அதில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களின் வெளிச்செல்லல் கடமை நேரத்தின் பின்னர் 10 நிமிடங்கள், 1 மணித்தியாலம் 30 நிமிடங்களுக்கு இடைப்பட்ட காலமாக இருந்தமையால் கடமை நேரத்தின் பின்னர் 2 மணித்தியாலங்கள் திட்டக் குழுக்கள் நடாத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டதுடன் கொடுப்பனவாக ரூபா 193,950 செலுத்தப்பட்டிருந்தது.

(ii) திட்டக் குழுக் கொடுப்பனவைச் செலுத்துவதற்காக ஆகக் குறைந்தது 10 கட்டிடத் திட்டங்கள் அல்லது இதற்கு மேற்பட வேண்டியதுடன் 10 இற்குக் குறையுமாயின் இதற்காக வழமையான கடமை நேரம் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் இதற்கான் கொடுப்பனவும் செலுத்தப்படுவதற்கான இயலுமை இருக்கவில்லை. எனினும், 17 சந்தர்ப்பங்களில் 10 கட்டிடத்திட்டங்களுக்கும் குறைவான எண்ணிக்கை இருக்கையில் திட்டக் குழுக்கள் நடாத்தப்பட்டு ரூபா 68,500 தொகை படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**3.5 ஊழியர் கடன்**

நாளாந்த ஊழியர்களாகக் கடமையாற்றி கடமையை விட்டுச் சென்ற 20 ஊழியர்களிடமிருந்து 2007 முதல் 2012 வரையான காலத்திற்குரித்தாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 21,490 தொகையான விழா முற்பண மீதி அறவிடப்படுவதற்கு செயற்பட்டிருக்கவில்லை.

**3.6 முற்பணம்**

2005 ஆம் ஆண்டு முதல் செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,283,746 தொகையான 62 முற்பண மீதிகள் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.7 ஒப்பந்த நிர்வாகம்**

(அ) ஹொரவல – மடவல பிரதான வீதியிலிருந்து திரும்பிச் செல்லும் மடவலவத்த வீதி சரளைக் கற்கள் இடப்பட்டு அபிவிருத்தி செய்தல்

மேற்குறித்த வீதி 94.6 மீற்றர்கள் நீளமாகக் காணப்பட்டதுடன், அகலத்தில் 2.7 மீற்றர்களுக்கு சரளைக் கற்கள் பதிக்கப்பட்டு விருத்தி செய்வதற்காக ரூபா 500,000 இற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. 2014 மார்ச் 11 ஆம் திகதி தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வில் பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) விடய இல 12 இன் கீழ் வீதியின் இரு மருங்கிலும் மண் ஆபத்தற்ற முறையில் இடப்பட்டு மட்டப்படுத்துவதற்காக ரூபா 2,500 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந் நடவக்கை மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மதிப்பீட்டு விடய இல. 04 இன் படி, 255.42 சதுர மீற்றர்களுக்காக 9502 பிணைப்புக் கற்கள் வீதியில் பதிக்கப்பட வேண்டியதுடன் கொடுப்பனவு அறிக்கையின் படி, இதற்காக ரூபா 323,068 தொகை 2014 பெப்ரவரி 07 ஆம் திகதி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ் வீதி பௌதீக ஆய்வின் போது எடுக்கப்பட்ட அளவீட்டின் படி, 228.58 சதுர மீற்றர்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 40 சதுர மீற்றர் கற்கள் பதிக்கப்பட்டிருந்தமையால் பதிக்கப்பட்டிருந்த மொத்த கற்களின் அளவு 9142 ஆகக் காணப்பட்டன. இதன் படி, 360 கற்களுக்காக ரூபா 12,240 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) நானாவித செயற்திட்டம்**

செயற்திட்டத்திற்காக 2013 ஆகஸ்ட் மாதம் ரூபா 2,778,829 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(i) 2 செயற்திட்டங்களுக்குரித்தான வீதி காணி உப கூறுகளுக்குரித்தானதாகும்.

(ii) 4 செயற்திட்டங்களுக்கான வீதி சபைக்குரித்தானதாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) குடிநீர் செயற்திட்டம் சபைக்குரித்தான ஓர் காணியில் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(iv) செயற்திட்ட உடன்படிக்கை செயலாளரால் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**3.8 வாகனக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 1647(உ) கட்டளையின் படி, வாகனப் பதிவேடொன்று சபையால் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகனம் தொடர்பாக ஓர் கணிப்பீடு பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) வாகனம் திருத்தப்படுகையில் அல்லது மேலதிக உதிரிப்பாகங்கள் அகற்றப்படுகையில் அகற்றப்படும் மேலதிக உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்களின் விபரங்கள் குறிப்பிட்ட ஓர் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் 20 வாகனங்களுக்குரித்தான மாதாந்தப் பொழிப்பு தயாரிக்கப்பட்டிராததுடன் ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வாகன விபத்துக்கள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் படி, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) வாகனக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) இருப்புக் கட்டுப்பாடு
(உ) பாதீடு